பணிப்புரை இல. 46.

## 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்

12 (2) ஆம் பிரிவின் கீழான் பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் 12 (2) ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவ்லகள் அதிகாரசபையானது, எவரேனும் உற்பத்தியாளரோ, விநியோகஸ்தரோ அல்லது வியாபாரியோ இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட எஸ். எல். எஸ். உற்பத்தி சான்றுப்படுத்தல் குறியீட்டினை நிரல் 1 இல் மற்றும் நிரல் 2 இல் குறிக்கப்பட்டுள்ளவாறு குறிக்கப்பட்டிருந்தாலன்றி உற்பத்தி செய்யவோ, விநியோகம் செய்யவோ, களஞ்சியப்படுத்தவோ, மொத்தமாகவோ அல்லது சில்லறையாகவோ விற்பனை செய்யவோ, விற்பனைக்காக வைக்கவோ, விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ அல்லது விற்பனைக்கு விடவோ முடியாது என இத்தால் பணிப்புரை வழங்குகின்றது.





| நிரல் 1<br>பொருட்கள் | நிரல் 2<br>பெயர் மற்றும் தரம் எண் |
|---|---|
| நிரல் 2 இல் குறிப்பிடப்பட்ட கட்டளையின் முகவுரையிலுள்ள பொருட்கள் : | SLS 733 - மின்வலு, ஒளியேற்றல் மற்றும் உள்ளக மின் கம்பியிடல் ஆகியவற்றுக்கு 450/740 V வரையும், உள்ளடங்கலாகவும் உள்ள உவோற்றளவு செப்புக்கடத்திகளுடனPVC காவுகையிலானதும், கவசம் சாராததுமான வடங்களுக்கான இலங்கை கட்டளை விவரக்கூற்று. |
| நிரல் 2 இல் குறிப்பிடப்பட்ட கட்டளையின் முகவுரையிலுள்ள கட்டளையின் (b) பகுதி முகவுரையின் அட்டவணையின் 13, அட்டவணை 14, அட்டவணை 15, அட்டவணை 16, அட்டவணை 17 இல் குறிப்பிடப்பட்டுள்ள வெப்பத்தால் இளகும் எளிதில் மின்காப்பிடப்பட்ட வளையக்கூடிய நாண்கள். | SLS 1143 - வீட்டு அலுவலக மற்றும் ஒத்த சூழல்களுக்கு உத்தேசமான உபகரணங்களுடனும் சாதனங்களுடனும் பயன்படுத்துவதற்கு 300/500 V வரையிலான வீதங்கணித்த மின் வளையத்தக்க நாண்களுக்கான இலங்கை கட்டளை விவரக்கூற்று. |

இப் பணிப்புரை 2014, திசெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,

ரூமி மர்சூக்,
தவிசாளர்.

கொழும்பு,
2013, திசெம்பர் 10.

12- 1244/2

---

பணிப்புரை இல. 47.

## 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்

12 (2) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் 12 (2) ஆம் பிரிவின் மூலம் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் தொழிற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, உள்நாட்டில் தயாரிக்கப்படும் ஏதேனும் நுளம்புச் சுருள்கள் அல்லது நுளம்பு வில்லைகளின் தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர் அல்லது வர்த்தகர்கள் எவரேனும் இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட எஸ். எல். எஸ். உற்பத்தி சான்றிதழ் இல்லாமல் அவற்றை தயாரிக்கவோ, விநியோகிக்கவோ, கொண்டு செல்லவோ, களஞ்சியப்படுத்தவோ, விற்பனை செய்யவோ, அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ அல்லது மொத்தமாகவோ அல்லது சில்லறையாகவோ விற்பனை செய்யவோ விற்பனைக்கு விடவோ முடியாது என பணிப்புரை வழங்குகின்றது.

நுளம்புச் சுருள்களுக்கான இலங்கை தரநிர்ணய குறியீடு - எஸ் எல் எஸ் 453

நுளம்பு வில்லைகளுக்கான இலங்கை தர நிர்ணய குறியீடு - எஸ் எல் எஸ் 930

இப் பணிப்புரை 2014, திசெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது, இப்பணிப்புரையின் மூலமாக, 2007, பெப்புருவரி 15 ஆந் திகதிய 1484/16 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 10 ஆம் இலக்க பணிப்புரையை இரத்துச் செய்கின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கட்டளைப்படி,

ரூமி மர்சூக்,
தவிசாளர்.

கொழும்பு,
2013, திசெம்பர் 10.

12- 1244/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.